# கிழக்கு மாகாணத்தில் யுத்தத்திற்கு பின்னரான சமூகக் கட்டமைப்பில் இந்துமத நிறுவனங்களின் வகிபங்கு (சிவன் மானுட மேம்பாட்டு நிறுவனத்தின் சமூகஞ்சார் செயற்பாடுகளை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு)

ந.சுபராஜ்
இந்து நாகரிகம், மொழித்துறை
தென்கிழக்குப் பல்கலைக்கழகம்
E-mail: subaraj84@yahoo.com

## ஆய்வுச் சுருக்கம்

ஒரு சமூகம் பல காரணங்களால் எதிர்நோக்கும் யுத்தத்தின் தாக்கம் யுத்தம் நிறைவடைந்த பின்னரும் அச்சமூகத்தில் நிலைத்து நிற்கும். அத்தகைய தாக்கங்களை மக்களிடமிருந்து நீக்குவதில் பல தரப்பினரும் முன்னின்று செயற்படுவர். ஆனால் அச்சமூகஞ்சார் சமய நிறுவனங்களே சிதைந்து போன தமது சமூகத்தின் கட்டமைப்பின் மீளாக்கத்திற்கு தமது உண்மையான உழைப்பினைக் கொடுக்கின்றன. இம்மாகணத்தில் யுத்தத்திற்கு பின்னரான சமூகக் கட்டமைப்பில் இந்துமத நிறுவனங்களின் வகிபங்கு பற்றி இவ்வாய்வு அலசுகின்றது. இவ்வாய்வின் முதல் நிலைத்தரவுகள் வினாக்கொத்து, பேட்டி முதலிய சமூக ஆய்வு முறைகள் மூலம் சிவன் மானுட மேம்பாட்டு நிறுவனத்தின் உறுப்பினர்கள் மற்றும் அதன் பயனாளிகள் முதலியோரிடமிருந்து சேகரிக்கப்பட்ட தகவல்களாகும். இந்நிறுவனம் தொடர்பான நூல்கள், சஞ்சிகைகள், போன்ற மூலங்களிலிருந்து திரட்டப்பட்ட தகவல்கள் பண்புசார் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்படுவதுடன் விமர்சன ரீதியிலமைந்த ஒப்பீட்டாய்வுக்கு உட்படுத்தப்படுகின்றது. இவ்வடிப்படையில் திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கி தனது பணிகளை செய்துவரும் சிவன் மானுட மேம்பாட்டு நிறுவனம் அம்பாறை மாவட்டத்திலும் தனது கிளையொன்றை விரைவில் நிறுவ இருக்கின்றது. போதுமான ஆளணி வளம் இல்லாத போதும் தமது நிறுவனத்தால் இயலுமான பணிகளைச் செவ்வனே நிறைவேற்றி வருகின்றது இந்நிறுவனம். ஆனால் இத்தகைய சமய நிறுவனங்கள் முக்கியமாக இரண்டு பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றன. சமூகத்திற்கான சேவைகளை அவை சரியான முறையில் செய்கின்றனவா என்பன போன்ற விமர்சன ரீதியிலான கருத்துக்களை எதிர்நோக்க வேண்டி ஏற்படுகின்றது. சுயலாபமற்ற இச்சேவைகளுக்காக பாரிய நிதிப்பற்றாக்குறை சிக்கல்களை எதிர்நோக்குகின்றன.

இப்பிரச்சினைகளுக்கான தீர்வு சமூகத்திலேயே தங்கியுள்ளது. தமக்கு சரியான சேவைகளைச் செய்யும் சமய நிறுவனங்களை இனங் கண்டு கொள்வது சமூகத்தின் கடமையாகும். அதேவேளை சமூகத்திற்காக உண்மையான தொண்டை இந்நிறுவனங்கள் செய்கின்றன என அறியும் பட்சத்தில் தமது முழு ஆதரவையும் அதற்கு வழங்க வேண்டும். இவற்றின் மூலமாகவே சிக்கலற்ற சமூகக்கட்டமைப்பை இந்நிறுவனங்களால் உருவாக்க முடியும்.

**Keywords:** சிவன் மானுட மேம்பாட்டு நிறுவனம், சமூகத்தின் கட்டமைப்பு, சமய நிறுவனம்